# சிறிய நடவடிக்கைகள் மிகப்பெரிய மாற்றங்களைக் கொண்டு வரும்

எரிசக்தியைச் சேமிப்பதை நமது தினசரி வாழ்க்கையின் ஓர் அம்சமாகக் கையாளுவோம். நமது தினசரி வாழ்க்கை முறையில் சின்னச் சின்ன மாற்றங்களைச் செய்வதன் மூலம் எரிசக்தியை மிகச் சிறப்பாகச் சேமிக்கலாம். மாற்றங்கள் எத்தகையதாக இருந்தாலும் அது மிகப் பெரிய மாற்றங்களைக் கொண்டு வந்தே தீரும். நமது கடமையை உணர்ந்து ஒவ்வொருவரும் சிறப்பாகச் செயற்படும்போது அதன் வழி கிடைக்கப் பெறும் நன்மைகளை நாம் அனைவரும் ஒன்றாக அனுபவிக்கவியலும்.



நீண்ட நேரப் பயனீட்டிற்கு LED விளக்குகளை உபயோகிப்பதன் மூலம் கூடுதலாக மின்சாரத்தைச் சேமிக்கலாம்.

குளிர்சாதனக் கருவியின் வெப்பநிலையை எப்போதுமே 24°C வைப்போம்.

பயன்படுத்தாத நேரங்களில் மின் விளக்குகளையும் மின் விசிறிகளையும் மட்டுமின்றி பிற மின் சாதனங்களின் இயக்கத்தையும் நிறுத்தி வைப்போம்.

குளிப்பதற்கு மின் சூடு இயந்திரத்தைப் பயன்படுத்தாமல் குளிர்ந்த நீரையே பயன்படுத்தவும்.

துணி துவைக்கும் இயந்திரத்தில் முழுமையாக துணிகளை நிரப்பி பயன்படுத்துவோம்.

சலவை இயந்திரத்தின் உலர் இயந்திரத்தைப் பயன்படுத்தாமல், சூரிய ஒளியில் துணிகளை காய வைக்கவும்.

குளிர் சாதன பெட்டியை ஒழுங்காக வைத்திருப்பது காற்று ஓட்டம் மற்றும் செயல்திறனை மேம்படுத்தும்

எரிசக்தி பயனீட்டு முத்திரையைக் கொண்ட மின் சாதனங்களைத் தேர்ந்தெடுத்து வாங்குவோம்.

இஸ்திரிப் போட வேண்டிய துணிகளை ஒரே தடவையாக சேர்த்து வைத்து மொத்தமாக இஸ்திரிப் போடவும்.

Tenaga Nasional Berhad 199001009294 (200866-W)

TENAGA NASIONAL
Better. Brighter.

75
1949-2024